BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# பிராம்ப்டன் நகரம் தீ தடுப்பு வாரம் அனுசரிக்கிறது

பிராம்ப்டன், ON (அக்டோபர் 5, 2023) – அக்டோபர் 7 முதல் 14 வரை, பிராம்ப்டன் நகரம் மற்றும் பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பானது, தீ தடுப்பு வாரத்தின் அதிகாரப்பூர்வ ஸ்பான்சர் ஆகிய தேசிய தீ பாதுகாப்பு சங்கம்® (NFPA®) உடன் இணைந்து செயல்படுகிறது – இது தீ தடுப்பு வாரத்தை அங்கீகரித்து தீயிலிருந்து பாதுகாப்பு மற்றும் தயார்நிலை பற்றி சமூகத்தினருக்கு எடுத்துரைக்கவேயாகும்.

இந்த ஆண்டிற்கான மையக்கருத்தாக இருப்பது "*சமையல் பாதுகாப்பு உங்களிடமிருந்துதான் தொடங்குகிறது*" என்பதாகும். *தீ தடுப்பு மீது கவனம் செலுத்துங்கள்*. என்பிரிட்ஜ் கேஸ் அமைப்பினால் நிதியுதவி செய்யப்படுகின்ற இந்த பிரச்சாரமானது, ஒவ்வொருவரும், தங்களையும் தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக, சமைக்கும் போது அனைவரும் செய்யக்கூடிய எளிய ஆனால் முக்கியமான செயல்களைப் பற்றி அறிவுறுத்துகிறது.

**சமையலறையில் பாதுகாப்பாக இருப்பதற்கான சிறு குறிப்புகள்**

- நீங்கள் சமைக்க அடுப்பில் இருக்கும்போது கவனமாக இருங்கள். நீங்கள் என்ன சமைக்கிறீர்கள் என்பதை எப்போதும் உன்னிப்பாகக் கவனியுங்கள். நீங்கள் சமைக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு நினைவூட்டுவதற்கு அலாரம் அமைக்கவும்.
- பாத்திரங்களின் கைப்பிடிகளை அடுப்பின் பின்புறம் திருப்பவும். சமைக்கும் போது எப்போதும் ஒரு மூடியை அருகில் வைத்துக்கொள்ளவும். ஒரு சிறிய கிரீஸ் தீப்பிடிக்க் ஆரம்பித்தால், பாத்திரத்தின் மேல் மூடியை செறுகி, பர்னரை அணைத்துவிடவும்.
- அடுப்பு அல்லது கிரில்லைச் சுற்றி மற்றும் வேறு எங்கும் சூடான உணவு அல்லது பானங்கள் தயாரிக்கப்பட்டு அல்லது எடுத்துச் செல்லப்படும் போது குறைந்தபட்சம் 3 அடி (1 மீட்டர்) தூரத்தினுள் "குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகள் இல்லாதவாறு" பார்த்துக்கொள்ளவும்,
- தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக 9-1-1க்கு அழைக்கவும்! வீட்டை விட்டு வெளியேறிவிடவும், வெளியிலேயே இருந்துவிடவும்!

தீ தடுப்பு வாரத்தை கொண்டாடும் வகையில், பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பானது, தீயணைப்பு நிலையங்களில் அனைவரும் வந்து பார்ப்பதற்காக, நகரம் முழுவதும் தீ பாதுகாப்பு பற்றிய காட்சிகளை நடத்தும்.

**நிகழ்வுகள் மற்றும் பாப்-அப்கள்**

**என்ன:** தீ பாதுகாப்பு காட்சிப்படுத்தல்

**தேதி:** அக்டோபர் 7

**நேரம்:** காலை 7:30– மதியம் 2:00

**எங்கே:** விவசாயிகள் சந்தை, கேஜ் பார்க் (Gage Park)

**என்ன:** தீ பாதுகாப்பு காட்சிப்படுத்தல்

**தேதி:** அக்டோபர் 7

**நேரம்:** காலை 9:00 – மதியம்1:00

**எங்கே:** லோவே’ஸ் ஹோம் இம்ப்ரூவ்மெண்ட் நார்த், 10111, ஹார்ட் லேக் ரோட் (Lowe's Home Improvement North, 10111 Heart Lake Road)

**என்ன:** தீ பாதுகாப்பு காட்சிப்படுத்தல்

**தேதி:** அக்டோபர் 7

**நேரம்:** காலை 9:00 – மதியம்1:00 pm

**எங்கே:** லோவே’ஸ் ஹோம் இம்ப்ரூவ்மெண்ட் சவுத் (Lowe's Home Improvement South), 370 கென்னடி ரோட் எஸ்

**என்ன:** தீயணைப்பு நிலையம் 213 திறந்த நிலையம்

**தேதி:** அக்டோபர் 10

**நேரம்:** பிற்பகல் 3:30 - 7:00

**எங்கே:** நிலையம் 213 திறந்த நிலையில், 4075 எபினேஸர் ரோடு (Ebenezer Rd)

**என்ன:** தீயணைப்பு நிலையம் 205 திறந்த நிலையம்

**தேதி:** அக்டோபர் 11

**நேரம்:** பிற்பகல் 3:30 - 7:00

**எங்கே**: தீயணைப்பு நிலையம் 205 திறந்த நிலையம், 95 சாண்டல்வுட் பார்க்வே (Sandalwood Pkwy)

**என்ன:** தீயணைப்பு நிலையம் 204 திறந்த நிலையம்

**தேதி:** அக்டோபர் 12, 2023

**நேரம்:** 3:30 - 7:00 pm

**எங்கே:** தீயணைப்பு நிலையம் 204 திறந்த நிலையம், 657 க்வீன் ஸ்ட்ரீட் (Queen St)

**என்ன:** தீ பாதுகாப்பு காட்சிப்படுத்தல்

**தேதி:** அக்டோபர் 14, 2023

**நேரம்:** காலை 10:00 – மதியம் 2:00

**எங்கே:** ப்ரமீலி சிட்டி சென்டர, லோயர் லெவல் (Lower level) பழைய நேவி அருகில்

தீ தடுப்பு வாரம் மற்றும் பாதுகாப்பாக சமைப்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தாருங்கள் www.bramptonfire.com and www.fpw.org. குழந்தைகளுக்கான தீ பாதுகாப்பு விளையாட்டுக்களுக்கு வருகை தாருங்கள்: sparky.org.

**அறிஞர் கூற்றுக்கள்**

"சமைக்கும் போது பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது நம் அனைவருக்கும் ஒரு முக்கியமான நினைவூட்டலாக இருக்க வேண்டும் என்பதே இந்த ஆண்டின் தீ தடுப்பு வாரத்திற்கான மையக் கருத்தாகும். விபத்துகள் மிக விரைவாக நிகழ்ந்துவிடக்கூடும். எனவே சமையலறையில் பாதுகாப்பாக இருப்பது முக்கியமாகும். தீ தடுப்பு வாரத்தை அனுசரிப்பதற்காக அக்டோபர் 7 முதல் 14 வரை நமது சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளில் ஒன்றில் பிராம்ப்டன் தீ மற்றும் அவசர சேவைகள் மற்றும் தீ பாதுகாப்பு பற்றி மேலும் அறிந்துகொள்ள குடியிருப்பாளர்களை ஊக்குவிக்கிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

"தீ பாதுகாப்பு என்பது ஒரு முக்கியமான பொருள் கொண்ட தலைப்பாகும் மற்றும் குடியிருப்பாளர்கள் அவரவர் வீடுகளில் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். தீ தடுப்பு வாரத்தில், அனைத்து குடியிருப்பாளர்களும் தங்கள் வீடுகளில் முடிந்தவரை தீயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யுமாறு நான் ஊக்குவிக்கிறேன். சமையலறைக்கான விதிகளை வீட்டில் உள்ள அனைவரும் அறிந்திருப்பதை உறுதிசெய்வது உயிர்களைக் காப்பாற்றும். சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளில் குடியிருப்பாளர்கள் கலந்துகொள்வதைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறேன், மேலும் நமது சமூகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு செய்யும் நம்பமுடியாத பணிக்காக அவர்களுக்கு பிராம்ப்டன் நன்றிக்கடன் பட்டுள்ளது."

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், பிராம்ப்டன் நகரம்*

"தீ தடுப்பு வாரம் என்பது, மக்கள் அவரவர் வீடுகளில் தீயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதையும், தீ விபத்து ஏற்பட்டால் அவர்கள் தப்பிக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டிருப்பதையும் உறுதி

செய்வதற்கான சிறந்த சமயமாகும். சமையலறையில் ஏற்படும் தீ என்பதுதான், வீடுகளில் ஏற்படும் தீ விபத்துகளுக்கு முக்கிய காரணமாகும், அது மிக விரைவாக நிகழ்ந்துவிடக்கூடும். சமையல் செய்யும் போது சமையலறையில் சில விதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், குடியிருப்பாளர்கள் தங்களையும் தங்களுக்குப் பிரியமானவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவலாம்.”

- *ஆண்ட்ரூ ஃபான் ஹோல்ட், தற்காலிக தீயணைப்புத்துறைத்தலைவர், பிராம்ப்டன்* தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca